துணைவேந்தர்

# பேராசிரியர் சு. வித்தியானந்தன்

# பாமலர்

1984-10-14 ஆந் திகதி
கல்முனையில் நடைபெற்ற
பாராட்டு விழாவின்போது
வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மருதூர்அலிக்கான்-

துணைவேந்தர்

## பேராசிரியர் சு. வித்தியானந்தன்

# பாமலர்

பொது நூலகம்
பதிவு இல:
AM/CC/46
02-10-1948
24

**மலர்க்குழு**

மருதூர் ஏ. மஜீத்
(தலைவர்)
அன்பு முகையதீன்
சண்முகம் சிவலிங்கம்
அ. ஸ. அப்துஸ்ஸமது
வித்துவான் கே. ஞானரெத்தினம்
ஏ. கே. எம். நியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அச்சுப் பதிப்பு:

குட்வின் ஒட்டோ அச்சகம்,
பிரதான வீதி, கல்முனை. தொலைபேசி: 067-2027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்

சு. வித்தியானந்தன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்

வருக வருக வண்டமி ழன்னையின்
ஒருபெரு மகனே வருக வருக
வித்தைகள் பலவும் மேனிலை பரவும்
உத்தர பல்கலை நிலையுப வேந்தே
இத்திசை மாணவ ரின்முகங் காண
வித்தியா னந்த வேந்தே வருக.
பல்கலைக் கழகப் பட்டம் எவையும்
கல்வியி னுயர்வாற் றனக்கெனக் கொண்டு
பல்கலைக் கழகப் பேரா சிரியராய்
பல்லாண் டிருந்து பயிற்றினை யாக
உன்திறங் கண்டு உபவேந் தாக
மன்னிலை யீந்தனர் மகிபா வருக.
மறைந்துள தமிழின் கலைச்செல் வங்கள்
இறந்தன வாகா துயிரெழச் செய்யும்
சிறந்த பணிமேற் கொண்டனை யின்னும்
கேட்டவாய்க் கேட்டுக் கிளி மொழியாரின்
நாட்டார் பாடல் நயம்தனைக் கண்டு
ஏட்டிற் பொறித்து இளந்தலை முறையார்
பாட்டுக் குதவிய பணியினை நினைவோம்
இறைதிரு மறையின் இயல்பினை யாய்ந்து
முறைபல நூல்கள் மொழிந்ததும் புனைந்த
பிறையன் பன்பெயர் பூண்டதுந் தெரிவோம்
இசுலா மியத்தமிழ் இலக்கியப் பரவையை
இசுலா மியரே தெரியா திருக்க
அதற்கோர் துறையை யமைத்துக் கொடுத்து
ஆய்வுகள் நிகழ்த்தி யருங்கலைப் பட்டம்
அருளிய பெருமையை அகத்திற் கொள்வோம்
தன்னை யுயர்த்தியும் தமிழ்க்கலா சாரம்
தன்னை யுயர்த்தியுந் தகைசால் புகழை
ஈட்டினை யின்னும் ஈன்றதாய் பணிகள்
நாட்டினில் நாட்ட நலமொடு பல்லாண்
டினிதே வாழ இறையருள்
நனிதர வேண்டினம் வருக வருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பல்லாண்டு

எம். ஏ. நு:.மான்

கட்டைக் கழுத்தும், கனத்த உடலும் கனிந்தஇரு
வட்ட விழியும் உடையார்; தம் சுங்கான் மணம்கமழ
உட்கார்ந் திருப்பர்; உறுதி, அடக்கம், உளம் நிறைந்த
நட்போ டுதிரும் முறுவலால் ஆன்இந் நல்லவரே.

நல்லவராக இருப்பவர் எல்லாம் இந் நானிலத்தில்
வல்லவ ராகவும் வாழ்தல் அரிது; இவ் வல்லவரோ
வெல்லும் திறன் மிகப் பெற்றவராயும் விளங்குகிறார்
எல்லாப் பொழுதும் தான் ஏற்கின்ற காரியம் யாவிலுமே.

யாவிலும் வெற்றியே காண்பவ ராயினும், நானறிய
நோவினை செய்தவர் அல்லர் பிறர்மனம் நோவுறவே.
பூவினை ஒத்தலர் புன்சிரிப் பாளர், புதியவரும்
தேவைகள் பெற்று மனநிறை வெய்திடச் செய்குவரே.

செய்வன யாவும் திருந்திடச் செய்யும் சிறப்புடையார்.
உய்யும் வழியற் றிருந்த கிராம உயர்கலைகள்
மெய்யாகவே இங்கு மேன்மை யடைய மிகஉழைத்தார்
வெய்யில் வழியில் மழைமேகம் போல்எங்கள் வித்தியரே.

வித்தியர் என்று வியமாய் நாங்கள் விழிக்கும் இவர்
சித்தம் மகிழ்ந்து மென்மேலும் வாழ்வில் சிறப்புறுக!
புத்துணர் வோடு புரிக பணிகள் புதுப்புதிதாய்
இத்தினம் போல் இன்னும் வாழ்க பல்லாண்டுநாம் இன்புறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாவென்றழைப்பேன்
# வண்ணப் பாய் விரிப்பேன்

மருதூர் — ஏ. மஜீத்

உன்னைப் பற்றி
ஓராயிரம் கதைகள்,
அதனால்
உன்னை நான்
ஒருமுறை காண்பதற்கு
எத்தனை தடவை ஏங்கியுள்ளேன்.

மாலையில் மலையில்,
மூடுபனி மூட்டத்தில்,
உன் ''கார்'' பஸ்ஸாகி
மாணவரை யேற்றி
குலுங்கி குலுங்கி
வருகின்ற வடிவு கூறும்.
மாணவரோ ஒரு கோடி.

சங்குக் கழுத்தில்
சந்திரன் முகம் வைத்த
குன்றுமணிக் கண்ணன்
கூர்புத்தி வித்தியென்று,
கூறிக் களித்திடும்
மாணவியர் மறுகோடி.

உன்னைப்பற்றி,
ஓராயிரம் கதைகள்,
அதனால்,
உன்னை நான்
ஒருமுறை காண்பதற்கு
எத்தனை தடவை ஏங்கியுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கண்டியிலே,
''புணர்ச்சி'' விதிகூறி
புதுமோடிக் கூத்தாகி,
நின்றுய் உன்னை,
நான் நினைத்தேன்
காண்பதற்கு முடியவில்லை.

புதுக்கவிதை (இல் - இன்)
பொருளான காலத்தில்
வருகின்றுய், வா!
உன்னை
வா வென்றழைப்பேன்
வண்ணத்தில் பாய்தருவேன்,
வாப்பா அறிந்தாலும்
வழியிருக்கு தப்புதற்கு,
தமிழின் (புணர்ச்சி) விதி
சதியான ஆண்டு
அறுபதின் பின் (பா) புணர்ச்சி (யா?)
அரும் (பா) வா
என் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையிலா அறிஞன் வாழ்க!

மு. சடாட்சரம்

கூத்தென்றால்...
முகம் சுழித்து
குசுகுசுத்த கூட்டத்தாரும்
ஏத்தி,
நற்கலை இதென்றே
இரவெலாம் விழித்திருந்து
பார்த்து;
அதில் இதயம் ஒன்றி,
பசிமறந்து,
இன்பங்காண,
வித்தியானந்தன் செய்த
விந்தையை மறக்கலாமோ?

செந்தமிழ்
உலகமெல்லாம்
செழித்திட
ஆசையுற்று
முந்தையர் வழியில் நின்று
முதுதமிழ் மரபு பேணி
விந்தைகள் புரியும்
எங்கள் வித்தியானந்தன் வாழ்க!
இன்தமிழ் ஆய்வில் வல்ல
இணையிலா
அறிஞன் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு முகையதீன்

எத்தனை ஆயிரம் மனிதர்கள் மண்ணிலே
இன்று பிறந்து அழிந்து போகிறார்
அத்தனை மனிதரும் எங்கள் நெஞ்சிலே
அழியா இடத்தையா பெற்று விடுகிறார்?
இத்தரை மீதினில் எண்ணிலா மானிடர்
இதுவரை அறுபது வயதைத் தாண்டினர்
நித்தமும் அவர்களை நினைத்தா பார்க்கிறோம்
நெஞ்சிலே தாங்கி விழாவா எடுக்கிறோம்.

வித்திக்கு ஏன் இன்று விழா வெடுக்கிறோம்
விதந்து போற்றியேன் பாவினை வடிக்கிறோம்.
எத்திக்கும் உள்ளோரும் ஏன்இன்று மதிக்கிறோம்
இன்னும் பல்லாண்டு வாழயேன்துதிக்கிறோம்
உத்தமர் வித்தி மக்கள் உயர்வுக்காய்
உழைத்த மாபெரும் சக்தி யென்பதால்
முத்தமிழ் ஈழ மூலைமுடுக் கெங்கும்
முழங்கச் செய்த வித்தகர் ஆனதால்.

நாட்டுக் கூத்தா அதையேன் எடுக்கிறாய்
நாகரீக உலகிலே பார்ப்பதா?
வீட்டுக் குள்ளே இருந்தவர் கூடதை
விரும்பா ஒதுக்கி விட்ட போதிலும்
பாட்டிகூட பார்த்ததை மகிழ்ந்திட
பார்த்தோர் எல்லாம் பரவச மாகிட
காட்டி நாட்டு கூத்தை உயர்த்திய
கலைஞர் வித்தியை எப்படிப் போற்றுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டில் எழுதத் தக்கதா அக்கவி
என்ன முஸ்லிம் பெண்களா பாடினர்
கேட்டு அன்று கேலி செய்தவர்
கிறுக்கை அடக்க வேண்டு மென்றுதான்
நாட்டில் புதைத்து அழிந்த மணிகளை
நாளும் தேடி யெடுத்து கனிகளை
ஏட்டில் பிழிந்து இலக்கிய மாக்கிய
இனிய பணியை எப்படி வாழ்த்துவேன்.

இன்று மதவெறி கொண்டு அலைபவர்
இந்த உலகிலே எங்கும் திரிகிறார்
அன்று இஸ்லாம் கூறிய கருத்தினை
அறிய படித்து சுவைத்து அவைகளை
நன்றாய் நாமும் படிக்கத் தக்கதாய்
நயக்கத் தந்த 'பிறையின் அன்ப'னே!
உன்றன் இதயப் பண்பைப் போற்றிட
உவமை தேடி இன்றும் தவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவே! வா!

மருதூர்க் கொத்தன்

ஆடவர் தோழிலுங் காவென்றும்
அரிவையர் நாவிலுங் காவென்றும்
பாடலைச் சூடிய தமிழ்மண்ணுன்
பாதங்கள் தோய்தரப் பரிந்துவா!
கூடிநம் ஊரவர் பயிலும்நற்
கூத்திலே ஆனந்தம் குலவன்பு
ஆடிய நெஞ்சத்து வித்தி!எம்
அருமைக்கு விருந்தின்று அளிக்கவா!

முத்தமிழ் மாமுனி விபுலாநந்த
மொய்ம்பினில் தழைத்திடும் முருகே! வா!
வித்தகன் கணபதிப் பிள்ளையின்
வழியென உலவுநல் விளேவே! வா!
மத்தியில் குறிஞ்சிநல் மண்ணில்; யாழ்
பல்கலைக் கழகத்தின் தலைமைகொள்
வித்தியே கல்முனை மண்ணிலுன்
மெல்லடி தோய்தர மகிழ்ந்துவா!

நறைவாரு மலரெங்கு மலர்ந்தாலும்
நசையோடு நுகர்கின்ற வண்டென்ன
பிறைச்சின்னம் கரமேந்திப் பூவெல்லாம்
புதுமைகள் விளைத்திட்ட முஸ்லிம்கள்
நிறைகண்டு கலைப்பண்பு ஆய்ந்தோர்ந்து
நூல்செய்து தந்திட்ட நிறைவே வா!
பிறையன்ப பெருமனது கொண்டெங்கள்
பதிமீது நின்பாதம் பதியவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. ஞானரெத்தினம்

தமிழுக்கு உயிராகத் தனியார்க்கு இதமாகத்
தவத்தினுல் வந்து உதித்த
அமிழ்துக்கு நிகரான ஆக்கங்கள் பலசெய்த
அண்ணலே உனது வாயால்
உமிழ்கின்ற எச்சிலும் உள்ளான உயிரதும்
உரிமையே பேசி நிற்கும்
கமழ்கின்ற தமிழ்மணம் காட்டிடும் ஆறுதல்
கவலையின் மருந்து அன்ருே!

ஏட்டிலே காண்கின்ற இலக்கியந் தன்னிலும்
இம்மியும் குறைவற்ற தாய்
நாட்டிலே வாழ்கின்ற இலக்கியம் உண்டென
நல்லபணி செய்து வைத்தாய்
தேட்டங்கள் தேடியே சென்றுபல திக்கிலும்
சேர்த்தனை குவியல் உந்தன்
நாட்டங்கள் வாழட்டும் நல்லபணி என்றுமே
நாட்டிலே நிலைக்க என்போம்.

வடக்கெனக் கிழக்கென இருமுனைப் பிரிவுடன்
வாழ்ந்தஅந் நில மக்களை
இடக்கராய் எந்நாளும் பிரிவுக்கு வழிகோரா
இருந்திடப் பால மானுய்
அடக்கமாய் அறிவினுல் அந்தஒரு தன்மையை
அழித்துஒரு புதிய மரபைக்
கொடுத்தனை வித்தியே! கொள்கையில் வெற்றியும்
கொண்டனை நிறைந்த பணியால்

வித்தியா னந்தனே! வீரனே! தீரனே!
மறவர்குல மாண்பு ஒளியே!
நித்தியம் வாழ்ந்திட நிமலனுன் ஆயுளை
நீட்டியே தந்த ருள்கவே
சத்தியம் உந்தனின் பணிகள்எம் தமிழர்க்குத்
தழைத்திடத் தொடர்ந்து நிலைக்க
இத்தினம் வேண்டிஞேம் என்றுமே தமிழன்ன
இளமையாய் வாழ்க என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசான் - சு. வி. ஆனந்த - அண்ணா!
## வாழ்க! வருக!

ஈழமேகம் பக்கீர்த்தம்பி

அறிவுலக ஆழியெனப் புகழ்படைத்த
ஆனந்தகுரு வித்தியானந்தனே
கல்முனைத்தாய் முகமலர்ந்து வருகவென்று
கனிவுகுழைந் தகநிறைவு பொழிந்து விம்மும்
சொல்முனையிற் றமிழூறி இஸ்லாம் பூக்கும்
சுடர்விழியை அமுதகலைக் குன்றமன்ன
அகத்தியனார் கண்ட தமிழ் அழகுவேந்தை
அன்பொழுக வருகவென அழைக்குமாதோ.

பொட்டழகு தொட்டழகன் அறிவின்குன்றம்
புகழ்பூத்த வாசனைப் புகழேந்தியை
பட்டுடையின் வெட்டுமுக உமறைச் சீறாப்
பாவோதிக் கவியழகு சொட்டுவோனை
பெட்டகம்போல் அறிவடக்க நிறைவுள் ளோனைப்
பேராசான் மார்களுக்கே பேராசானை
பத்தரைப்பொன் மாற்றறியாத் தங்கம்தந்த
பைந்தமிழை யாழ்பெற்ற பண்பின் குன்றம்.

உபவேந்தை ஆயகலை உச்சங்கண்ட
உளமுடைய அகத்தியனை உமர்கையாமை
வல்லவனை எம்முஸ்லிம் சமுகத்தோடு
வழுவாது ஒட்டிவாழ் நல்லாசானை
சமுதாயக் கறைகழுவிக் குறைகளைந்த
தமிழ்முனியை தமிழுக்கு உயிரையூட்டும்
கலிகால சேக்ஸ்பியரை மில்டன் தாந்தே
கலைகண்ட கம்பனிளங்கோவே – வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியம் வாழும் வித்தியானந்தன்!

ஜீவா ஜீவரத்தினம்

சத்து மலிந்த தமிழாஞ் சுவையுணவை
மெத்தப் புசித்த விறல்ஞானி — வித்தியா
னந்தன் திறனை நவிலத் தகுமொழிகள்
எந்தன் அறிவிற் கிலை.

சருவ கலாசாலைத் தலைவன்; தனக்குள்
கருவமெது மற்ற கலைஞன் — உருவில்
எளியோன்; எவர்க்கும் இனியன்; மரபு
தெளியாரைச் சுட்டெரிக்கும் தீ!

நாட்டுக்கூத் தென்றால் நகையாடியோர் வாயின்
ஆட்டம் இவரால் அடங்கியதே — தேட்டமெனச்
செந்தமிழர் இக்கலையைச் சிந்தையிலே கொள்ளற்குத்
தந்தான் புதுமெருகு தான்.

கலாநிதிகள் நூற்றுக் கணக்கிலே தோன்ற
அலாதி பணிபுரியும் ஐயா — கலாநிதி, சு.
வித்தியா னந்தன் விரிபுகழ் வையத்தே
நித்தியமாய் வாழும்; நிசம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியானந்தரெனில் ....

பாண்டியூரான்

வளங்கிடந்த புலமெல்லாம்
மணிவிழுந்து விளைந்தாலும் பக்குவத்தால்
களம்பொலியும் பயனுக்கிக்
காட்டியசொல் லேருழவன், பழமைகுன்றும்
இளம்தலை முறைக்கழியா
எழில்மகுடம் புனைந்தழகு பார்த்தவேந்தன்,
தளர்ந்தவுயிர் நரம்புக்குத்
தடித்தவுணர் வூட்டியவர் வித்தியானந்தன்

நாட்டவரின் புழுதியிலே
நடைபயின்ற நாட்டுக்கூத்(து) அண்ணாவியோர்
தேட்டமென நாவலரும்,
தேசத்துக்காவலரும், திளைத்துப் போற்றும்
பாட்டுஜதை கதிதாளம்
பண்சதங்கை சல்லாரி, போடிவர்க்கம்
ஏட்டினிலும் இதயத்தும்
இவர்தந்தால். . . வித்தியானந்தம் தானே!

ஆதவற்கு ஒளியுண்டு,
அம்புலிக்கும் குளிருண்டு, அகன்றஆழி
மோதுகடற் பேழைக்குள்
முன்னெவரும் வைத்தறியா மணிமுத்துண்டு.
போதவிழ்ந்தால் தேனுண்டு,
பொன்னுக்கு மதிப்புண்டு, புகழேபூண்ட
வேதமெனிற் பொருளுண்டு,
வித்தியானந்தரெனில் வேறென் உண்டு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. யூ. எம். ஏ. கரீம்

கலையுமிழும் கதிரவனே
கான்சுரக்கும் கார்முகிலோ
அலையெறியும் கடலுக்குள் மணிமுத்தோ
நிலையில்லா
தொலைபாயும் மனத்தின் கண்
அறிவமுதைச் சுரக்கவைத்தோன்
தலைமகனும் வித்தியானந்(தன்) தான்

செந்தமிழின் சிறப்பதனைச்
செகமெல்லாம் செப்புதற்கு
எந்தமிழர் கண்டெடுத்த இரத்தினமே
இன்றுமக்கு
பைந்தமிழர் சேர்ந்தொன்றாய்
பல்சிறப்புச் செய்தார்கள்
நைந்துவிழும் தமிழாழும் பார்

மணிவிழாக் காண்கின்ற
மாண்புடைய பேறு பெற்ற
தனிநிகர் துணைத்தலைவா
தமிழ்த்துறைக்கு — அணிசெய்யும்
மனிதரைத்தான் எம் நாடும்
பெற்றுவிட மக்களது
தணியாத ஆசைகளும் போம்.

இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர்
என்றின்னோர்
சிந்து புகழ் மொழிகள் சிறந்தும்மில்
சந்ததமும்
வந்தனை செய் தமிழ் மொழிக்காய்
வாழ்ந்திடினும் உயர்வுதர
எந்த விதமும் வாழ்த்துவோம் யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலர் வெளிவரவும்
விழா சிறப்புற நடைபெறவும்
உதவியோர் அனைவருக்கும்
எமது நன்றிகள்.

எஸ். எச். எம். ஜெமீல்
சங்கைக்குரிய சகோதரர் எஸ். ஏ. ஐ. மத்தியூ
மருதூர் ஏ. மஜீத்
அன்பு முகையதீன்
பி. செல்வநாயகம்
டாக்டர் எஸ். சலாக்கியநாதன்
யூ. எல். எம். முகையதீன்
பொ. இராசலிங்கம்
திருமதி. எஸ். விஜயரெத்தினம்
த. வேல்முருகு
சண்முகம் சிவலிங்கம்
கே. ஞானரெத்தினம்
ஏ. கே. எம். நியாஸ்
அ. ஸ. அப்துஸ் ஸமது
எம். ஐ. எம். முஸ்தபா
வி. வெங்கடாச்சலம்
எம். சி. ஹமீத்
ஐ. எம். இஸ்ஸத்தீன்
மருதூர் ஏ. அலிக்கான்
கே. பாலசுப்ரமணியம்
எம். எம். எம். இப்ருகீம்
எச். எம். பாறூக்
எம். எச். காதர் இப்ருகீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலர் வெளிவர நிதியுதவி வழங்கிய



# கல்முனை சொர்ணம் நகை மாளிகை

உரிமையாளர்

திரு. எம். விஸ்வநாதன் அவர்களுக்கு

எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GOODWIN AUTO PRESS

GAP

KALMUNAI

Phone : 067-2027

0024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org